# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

## பேச்சுப் போட்டி 2022

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au



### ஆண்டு 4

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம் !

### விளையாட்டும் அதன் வெற்றி தோல்வியும் !

விளையாட்டு என்றதுமே உங்கள் ஒவ்வொருவரின் முகத்திலும் ஒரு புத்துணர்ச்சியைக் காண்கின்றேன் ! அதுதான் விளையாட்டின் மகத்துவம் !

குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை, உடலுக்கு விறுவிறுப்பான உற்சாகத்தையும், மனதுக்கு மகிழ்ச்சியையும், சிலருக்கு வருமானத்தையும் கொடுக்கும் ஒரு வினோதமான பயிற்சிதான் விளையாட்டு.

”ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா” என்று மகாகவி பாரதியார் அன்றே பாடியுள்ளார். ஒவ்வொரு தமிழ்த்தாயும் தன் குழந்தைக்கு இதனைப்பாடி சோம்பல் தவிர்த்திடுவர்.

ஒலிம்பிக்கை உலகமே பார்க்கிறது. ஏன்? ரசித்தவர்களுக்குப் புரியும். விளையாட்டில் வெற்றி பெற்றவன் வீரன். ஆனால் தோல்வியை ஏற்றுக்கொண்டு, மீண்டும் வெற்றிக்காக முயற்சி செய்பவன் மகாவீரன்.

விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் நிச்சயமனதே. இது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. எனவே நீங்கள் வெற்றியையும் தோல்வியையும் சமனாகப்பார்க்க கற்றுக்கொள்ளவேண்டும். அது உங்கள் நல்வாழ்வுக்கு வித்திடும் !

முயற்சி திருவினையாக்கும் !

நன்றி,
வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன்.
ஆசிரியர் செல்வி. சாமினி ரமணன்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.